RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023- 2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-30 | 30 ஜனவரி | வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணி தொடக்கம்



ஈரோடு, ஜன.30

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பயன்படுத்தப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி தொடங்கியது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடக்கவுள்ளது. இதில், திமுக, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் என மொத்தம் 46 பேர் போட்டியிடுகின்றனர். கடந்த 20ம் தேதி வேட்பாளர்களுக்கு சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, வாக்குப் பதிவு இயந்திரங்களில் பொருத்துவதற்காக, வேட்பாளர்கள் பெயர், சின்னம் ஆகியவை அச்சிடப்பட்ட 'பேலட் ஷீட்'களை அச்சிடும் பணி சென்னையில் நடந்தது.

இப்பணி நிறைவடைந்த நிலையில், வாக்குப்பதிவு இயந்திரங்களில், வேட்பாளர் பெயர் மற்றும் சின்னம் பொருத்தும் பணி, ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் இன்று (ஜன.29) காலை தொடங்கியது. இப்பணியைப் பார்வையிட வேட்பாளர்கள், முகவர்கள் சோதனைக்குப் பின் அனுமதிக்கப்பட்டனர். ஈரோடு மாநகராட்சி பாதுகாப்பு அறையில் இருந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் முன்னிலையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் திறக்கப்பட்டு மாநகராட்சி கூட்டரங்குக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வாக்குப்பதிவு இயந்திரங்களில், வேட்பாளர் பெயர், சின்னம் பொருத்திய 'பேலட் ஷீட்' பொருத்தும் பணியில் அலுவலர்கள் ஈடுபட்டனர். ஒரு வாக்குப் பதிவு இயந்திரத்தில் 16 வேட்பாளர்களின் பெயர்கள் மட்டுமே பொருத்த முடியும் என்ற நிலையில், 46 வேட்பாளர்கள் மற்றும் நோட்டா என மொத்தம் 47 பேர் களத்தில் உள்ளதால், ஒரு வாக்குச் சாவடிக்கு 3 வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன.

அதன்படி, இந்த்த் தேர்தலில் 237 வாக்குச் சாவடிகளிலும், 20 சதவீதம் கூடுதல் வாக்குப் பதிவு இயந்திரங்களையும் சேர்த்து மொத்தம் 852 வாக்குப் பதிவு இயந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 308 விவி பேட் இயந்திரங்கள் பயன்படுத்தப்படவுள்ளன. இதில், 852 வாக்குப் பதிவு இயந்திரங்களிலும் வேட்பாளரின் பெயர், சின்னம் அச்சிடப்பட்டுள்ள 'பேலட் ஷீட்'கள் பொருத்தும் பணி தொடங்கியுள்ளது. இப்பணி மூன்று நாட்களுக்குள் நிறைவடையும் என தேர்தல் அலுவலர்கள் தெரிவித்தனர்.

## டங்ஸ்டன் போராட்ட வெற்றியை பொங்கல் வைத்து கொண்டாடிய அரிட்டாபட்டி மக்கள்



மதுரை, ஜன.30

டங்ஸ்டன் போராட்ட வெற்றியை அரிட்டாபட்டி மக்கள் பொங்கல் வைத்து கொண்டாடினர்.

டங்ஸ்டன் திட்டத்தை எதிர்த்து பல கட்ட போராட்டம் நடந்த நிலையில் கடந்த 23ம் தேதி மத்திய அரசு சார்பில் மேலூர் பகுதி அம்பலகாரர்களை டெல்லிக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்தியது. இதையடுத்து, மேலூர் பகுதியில் உள்ள பல்லுயிர் தளம் மற்றும் பாரம்பரிய சின்னங்களை பாதுகாக்கும் நோக்கில் சுமார் 5000 ஏக்கர் பரப்பில் அறிவிக்கப்பட்டுள்ள நாயக்கர்பட்டி டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை மத்திய அரசு ரத்து செய்வதாக அறிவித்தது.

இந்த ரத்து அறிவிப்பை மேலூர் சுற்றுவட்டார மக்கள் வரவேற்றதோடு அரிட்டாபட்டி அ.வல்லாளபட்டி நரசிங்கம்பட்டி, தெற்குத்தெரு சுற்றுவட்டார மக்கள், முல்லை பெரியாறு விவசாயிகள் சங்கத்தினர், டங்ஸ்டன் சுரங்கத்திட்ட எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு உள்ளிட்டோர் இணைந்து மேலூர் பென்னிக் குவிக் பேருந்து நிலைய வரை பேரணியாக சென்று காஞ்சிவனம் கோயிலில் வழிபாடு நடத்தி, வாழ்த்துகளை பறிமாரி, வெடி வெடித்து இனிப்புக்களை வழங்கி மகிழ்ந்தனர்.

இந்நிலையில் கடந்த 27ம் தேதி அரிட்டாபட்டிக்கு வருகை வந்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் டங்ஸ்டன் திட்டம் ரத்து செய்யப்பட்டது மக்களுக்கான வெற்றி, நமக்கான வெற்றி என்றதோடு, கிராமசபை கூட்டத்திலும், மேலூர் ஆர்ப்பாட்டத்திலும் எழுந்த எதிர்பினால் மத்திய அரசுக்கு கடிதம் எழுதியதாகவும், மக்களுக்கு எதிரான எந்த ஒரு திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தினால் அதை தமிழ்நாடு அரசு தடுத்து நிறுத்தும் என்று கூறினார்.

போராட்டங்களில் தங்களின் நூற்றுக்கணக்கான அம்மன், கருப்பர், அய்யனார் சாமிகளையும் அதோடு தொடர்புடைய பண்பாட்டு மரபுகளை கைவிட்டுவிட்டு ஊரை விட்டு போகமுடியாது என உறுதியாக பேசிவந்த மக்கள், தங்களின் வெற்றியின் ஒருபகுதியாக அரிட்டாபட்டி இளமநாயகி அம்மன் கோயிலில் பொங்கல் வைத்து, பெண்கள் குலவையிட்டும் கும்மியடித்தும் வழிபாடு மேற்கொண்டனர். இதில் அரிட்டாபட்டி சுற்றுவட்டார மக்கள், பெரியார் ஒரு போக பாசன விவசாயி சங்கத்தினர், மேலூர் பகுதி வணிக சங்கத்தினர், டங்ஸ்டன் சுரங்கத் திட்ட எதிர்ப்பு மக்கள் கூட்டமைப்பு பொருப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சென்னையில் மூளைச்சாவு அடைந்த 2 பேரின் உடல் உறுப்பு தானத்தால் 6 பேருக்கு மறுவாழ்வு



சென்னை, ஜன.30

செங்கல்பட்டு வல்லம் பகுதி ஆலப்பாக்கம் காலனி யைச் சேர்ந்த பி.சதீஷ்குமார்(33) என்பவர் தலைவலி, கையில் உணர் வின்மை மற்றும் நினைவின்மை காரணமாக ஊேள்ள ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு பக்கவாத அறிகுறிகள் இருந்ததைக் கண்டறிந்த மருத்துவர்கள், தீவிர சிகிச்சை அளித்து வந்த நிலையில், அவர் மூளைச்சாவு அடைந்தார்.

அதேபோல், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த ஆர்.குணசுந்தரி (52) என்பவர் அதிகப்படியான வியர்வை, நினைவின்மை காரணமாக அனுமதிக்கப்பட்டார். அவரின் மூளை தசையில் போதுமான ரத்த ஓட்டம் இல்லாமல் பாதிக்கப்பட்டு, நினைவற்ற தன்மையில் இருப்பது கண்டறியப்பட்டது. மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்த நிலையில், அந்த பெண் மூளைச் சாவு அடைந்தார்.

மூளைச்சாவு அடைந்த இருவரின் உடல் உறுப்புகளை தானம் கொடுக்க இருவரின் குடும்பத்தினரும் முன்வந்தனர். இதையடுத்து, 4 சிறுநீரகங்கள், 2 கல்லீரல்கள், 2 கணையங்கள், இதய வால்வுகள், ஒரு சிறுகுடல் மற்றும் வயிற்றுப்பகுதி, 4 கண்விழிப் படலங்கள் எடுக்கப்பட்டன.

உறுப்பு மாற்று சிகிச்சை: இதில், ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமனையில் உள்ள 43 வயது பெண்ணுக்கு ஒரு சிறுநீரகம், 36 வயது ஆணுக்கு ஒரு சிறுநீரகம், 61 வயது ஆணுக்கு ஒரு கல்லீரல், 48 வயது ஆணுக்கு ஒரு கல்லீரல், 36 வயது பெண்ணுக்கு ஒரு கண் விழிப்படலம், 46 வயது ஆணுக்கு ஒரு கண் விழிப்படலம் பொருத்தப்பட்டது.

இந்திய மருத்துவ சிகிச்சைத் துறையில் சாதனையாக ஸ்ரீராமச்சந்திரா மருத்துவமையத்தில் 24 மணிநேர இடைவெளிக்குள் ஏற்பட்ட இரண்டு மூளைச் சாவு நோயாளிகளின் உறுப்புகளைத் தானமாகப் பெற்று மற்றவர்களுக்கு பொருத்தி புதிய வாழ்க்கை அளிக்க 6 அறுவை சிகிச்சை கூடங்களும், சம்பந்தப்பட்ட மருத்துவக் குழுக்களும் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டன.

மருத்துவர்கள் குழு: இந்த சிகிச்சைகளில் 30 மருத்துவர்களும், 50 துணை மருத்துவர்களும் இணைந்து பணியாற்றினர். இதனால் இயல்பாக நடக்கும் மற்ற அறுவை சிகிச்சைகள் பாதிக்கப்படவில்லை. இதன்மூலம் 6 பேருக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளது. மாற்று உறுப்பு பெற்ற அனைத்து நோயாளிகளும் நலமுடன் இருப்பதாக மருத்துவமனையின் சிறுநீரக அறுவை சிகிச்சை மற்றும் உறுப்பு மாற்று துறை பேராசிரியர் மருத்துவர் கே.நடராஜன் தெரிவித்தார்.

## கும்பமேளா கூட்டநெரிசலில் உயிரிழப்பு: குடியரசுத் தலைவர் முர்மு, பிரதமர் மோடி உள்ளிட்டோர் இரங்கல்



புதுடெல்லி, ஜன.30

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜ் நகரில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி பலர் உயிரிழந்துள்ள நிலையில், அன்புக்குரியவர்களை இழந்த பக்தர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதாக குடியரசு தலைவர் திரவுபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் மோடி வெளியிட்டுள்ள எக்ஸ் திவில், "பிரயாக்ராஜ் மஹா கும்பத்தில் நடந்த விபத்து மிகவும் வருத்தமளிக்கிறது. இதில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த பக்தர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கல்கள். இதனுடன், காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன். பாதிக் கப்பட்டவர்களுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்குவதில் உள்ளூர் நிர்வாகம் ஈடுபட்டுள்ளது. இது தொடர்பாக, நான் முதல்வர் யோகி ஜியுடன் பேசியுள்ளேன், மேலும் மாநில அரசுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

குடியரசு தலைவர் திரவுதி முர்மு வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பிரயாக்ராஜ் கும்பமேளாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசல் சம்பவம் மிகவும் வருத்தமளிக்கிறது. உயிரிழந்த பக்தர்களின் குடும்பத்தினருக்கு எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன், காயமடைந்த பக்தர்கள் அனைவரும் விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

பிரயாக்ராஜ் கூட்ட நெரிசல் குறித்து கருத்து தெரிவித் துள்ள மக்களவை எதிர்க் கட்சித் தலைவர் ராகுல் காந்தி, "பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் பலர் உயிரிழந்துள்ளதாகவும், பலர் காயமடைந்துள்ளதாகவும் வந்துள்ள செய்தி மிகவும் வருத்தமளிக்கிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்து கிறேன்.

நிர்வாக சீர்கேடும், பொதுவான பக்தர்களின் நலனில் கவனம் செலுத்தமால் விஐபிக்கள் மீது மட்டும் கவனம் செலுத்தியதுமே இந்த துயர சம்பவத்திற்குக் காரணம். மகா கும்பமேளாவுக்கு இன்னும் நிறைய நேரம் இருக்கிறது, இன்னும் பல மகாஸ்நானங்கள் நடக்க உள்ளன. இன்று போன்ற ஒரு துயர சம்பவம் மீண்டும் நிகழாமல் தடுக்க அரசாங்கம் அமைப்பை பலப்படுத்த வேண்டும்.

விஐபி கலாச்சாரம் கட்டுப்படுத்தப்பட வேண்டும், மேலும் பொது பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசாங்கம் சிறந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுமாறு காங்கிரஸ் தொண்டர்களையும் தலைவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்." என்று தெவித்துள்ளார்.

பிரியங்கா காந்தி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பிரயாக்ராஜின் புனித தலத்தில் மவுனி அமாவாசையை முன்னிட்டு நடந்த விபத்தில் ஏராளமான பக்தர்கள் உயிரிழந்த செய்தி மிகவும் வருத்தமளிக்கிறது. இறந்தவர்களின் ஆன்மாக்களுக்கு கடவுள் அமைதியைத் தரட்டும். உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன்.

காயமடைந்தவர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யுமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கிறேன். இறந்தவர்களை அடையாளம் கண்டு அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்க வேண்டும், மேலும் பக்தர்களின் வசதியை மிக முக்கியமாகக் கருதி உடனடி ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும், இதனால் எதிர்கால நீராடல் சடங்குகள் அனைத்தும் பாதுகாப்பாக முடிக்கப்படும்.

பல நூற்றாண்டுகள் பழமையான அகாடாக்களின் அரச குளியல் பாரம்பரியத்தை முடிவுக்குக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பக்தர்கள் பொறுமையுடனும் அமைதியுடனும் நீராடுமாறு கேட்டுக் கொள்கிறேன். கங்கை அன்னை அனைவரையும் காக்கட்டும்." என தெரிவித்துள்ளார்.


காங்கிரஸ் தலைவர் கார்கே வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "மகா கும்பமேளாவின் போது, தீர்த்தராஜ் சங்கமக் கரையில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் பலர் உயிரிழந்துள்ளனர், பலர் காயமடைந்துள்ளனர் என்ற செய்தி மிகவும் வேதனையளிக்கிறது.

பக்தர்களின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறோம்.

அரைகுறை ஏற்பாடுகள், விஐபிகளின் நடமாட்டம், நிர்வாகத்தை விட சுய விளம்பரத்தில் அதிக கவனம் செலுத்தியது, தவறான நிர்வாகம் ஆகியவையே இதற்குக் காரணம். ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவழித்தாலும், இதுபோன்ற ஒரு அமைப்பைக் கொண்டிருப்பது கண்டனத்துக்குரியது.

பக்தர்களின் தங்குமிடம், உணவு, முதலுதவி மற்றும் நடமாட்டத்திற்கான ஏற்பாடுகளை விரிவுபடுத்த வேண்டும். மேலும் விஐபிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இதைத்தான் நமது துறவிகளும், முனிவர்களும் விரும்புகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு சாத்தியமான அனைத்து உதவிகளையும் வழங்குமாறு காங்கிரஸ் தொண்டர்களை கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

## நாடாளுமன்ற கூட்டுக் குழு வாக்கெடுப்பில் வக்பு திருத்த மசோதா ஏற்பு



புதுடெல்லி, ஜன.30

வக்பு திருத்தச் சட்ட மசோதாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பாக இன்று நடைபெற்ற வாக்கெடுப்பில், திருத்தங்களும், மசோதாவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தற்போது அமலில் உள்ள வக்பு சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள முடிவெடுத்த மத்திய அரசு, வக்பு (திருத்த) மசோதாவை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 8ம் தேதி மக்களவையில் தாக்கல் செய்தது. இதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, இந்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் (ஜேபிசி) ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

பாஜக எம்.பி. ஜெகதாம்பிகா பால் தலைமையில் அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் பாஜக மற்றும் அதன் கூட்டணிகள் சார்பில் 16 எம்.பி.க்களும் எதிர்க்கட்சிகள் சார்பில் 10 எம்.பி.க்களும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர். இக்குழு 30 தடவைக்கு மேல் கூடி இந்த மசோதா குறித்து விவாதித்தது. அப்போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இடையே காரசார விவாதங்கள் நடைபெற்றன. மசோதாவில் பல்வேறு திருத்தங்களுக்கு இரு தரப்பில் இருந்தும் பரிந்துரைகள் முன்மொழியப்பட்டன.

இதையடுத்து, இந்த திருத்தங்கள் மீது நேற்று முன்தினம் (ஜன. 27) வாக்கெடுப்பு நடைபெற்றது. இதில், ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி எம்பிக்கள் கொண்டு வந்த 14 திருத்தங்கள் வாக்கெடுப்பு அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதேபோல், எதிர்க்கட்சிகள் தரப்பில் கொண்டு வந்த திருத்தங்கள் வாக்கெடுப்பின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டன.

திருத்தங்கள் தொடர்பான அறிக்கையும், திருத்தங்களின் அடிப்படையிலான மசோதாவும் உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறுவதற்காக இன்று மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. கூட்டத்துக்குப் பின்னர் இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய பாஜக எம்பி டாக்டர் ராதா மோகன் தாஸ் அகர்வால், "வக்பு திருத்த மசோதா குறித்த அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு ஆதரவாக 14 பேரும், எதிராக 11 பேரும் வாக்களித்தனர். பல்வேறு கட்சிகள் தங்கள் எதிர்ப்புக் குறிப்புகளைச் சமர்ப்பித்துள்ளன. அறிக்கை நாளை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படும். அரசு செய்யும் பணிகளை எதிர்ப்பது எதிர்க்கட்சிகளின் வேலை. அவ்வாறு செய்வது அவர்களின் மரபணுவிலேயே உள்ளது" என தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கூட்டுக்குழு (ஜேபிசி) கூடுவதற்கு முன்பாக செய்தியாளர்களிடம் பேசிய ஜகதாம்பிகா பால், "நாடாளுமன்றக் கூட்டுக் குழு தயாரித்த 656 பக்க அறிக்கையை அனைத்து உறுப்பினர்களுக்கும் நாங்கள் அனுப்பி வைத்தோம். நாடாளுமன்றக் கூட்டுக் குழு விவாதங்கள் நடத்தி அதன் பிறகு அறிக்கை தயாரிக்கப்பட்டது. எனவே, இந்த அறிக்கையை கூட்டுக் குழு அறிக்கையை ஏற்றுக் கொள்ளும்.

வக்பு தொடர்பாக அமைக்கப்பட்ட நாடாளுமன்றக் கூட்டுக் குழுவுக்கு இரண்டு காரணங்களுக்காக இந்த நாள் ஒரு முக்கியமான நாள். நாங்கள் எங்கள் அறிக்கைகளை மக்களவை சபாநாயகரிடம் சமர்ப்பித்து அதை ஏற்றுக்கொள்ளச் செய்வோம். மேலும், திருத்தப்பட்ட மசோதாவையும் ஏற்றுக்கொள்ளச் செய்வோம். ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது ஒரு உறுப்பினரின் உரிமை. அறிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், நான் சபாநாயகருக்குத் தெரிவிப்பேன், அவர் நடைமுறையின்படி செயல்படுவார்." என குறிப்பிட்டார்.

## கோவை மத்திய சிறையில் கைதி உயிரிழந்த விவகாரம்: துணை ஜெயிலர் உட்பட 4 பேர் சஸ்பெண்ட்




கோவை, ஜன.30

கோவை மத்திய சிறையில் கைதி உயிரிழந்த விவகாரத்தில் துணை ஜெயிலர் உட்பட 4 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

திருநெல்வேலி மாவட்டம் காரையிறுப்பு பகுதியைச் சேர்ந்தவர் யேசுதாஸ் என்ற தாஸ் (33). இவர், திருப்பூர் மாவட்ட காவல் எல்லைக்குட்பட்ட பகுதியில் நடந்த ஒரு கொலை வழக்கில் கைது செய்யப்பட்டார். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து கோவை மத்திய சிறையில், கடந்த 2016ம் ஆண்டு முதல் தண்டனைக் கைதியாக அடைக்கப்பட்டிருந்தார்.

சிறையில் உள்ள தொழிற்கூடத்தில் இவர் வேலை செய்து வந்தார். இந்நிலையில் கடந்த 27ம் தேதி மதியம் சிறையில் 8வது பிளாக்கில் உள்ள கழிவறைக்குச் சென்ற அவர் மயங்கி விழுந்ததாக கூறப்படுகிறது. அங்கிருந்த காவலர்கள் இவரை மீட்டு சிகிச்சைக்காக கோவை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்த போது, யேசுதாஸ் உயிரிழந்தது தெரிய வந்தது.

அவரது கழுத்து பகுதியில் எலும்பு உடைந்திருந்ததும், அதனால் மூச்சுத்திணறி அவர் உயிரிழந்தது தெரியவந்தது. அவர் கீழே விழுந்ததில் தரையில் இருந்த ஏதாவது பொருள் பட்டு அவரது கழுத்து எலும்பு முறிந்ததா? அல்லது சிறையில் சக கைதிகள் அல்லது வேறு யாராவது தாக்கியதால் அவர் உயிரிழந்தாரா என்பது குறித்து ரேஸ்கோர்ஸ் போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

இந்நிலையில், சம்பவம் நடைபெற்ற நாளில் 8வது பிளாக்கில் பணியில் இருந்த துணை ஜெயிலர் மனோரஞ்சிதம், உதவிசிறை அலுவலர் விஜயராஜ், சிறை தலைமை காவலர் பாபுராஜ், சிறை காவலர் தினேஷ் ஆகியோரை இன்று (ஜன.29) பணியிடை நீக்கம் செய்து சிறைக் கண்காணிப்பாளர் செந்தில்குமார் உத்தரவிட்டுள்ளார்.

மாலை தந்தி

30.01.2025



தமிழ்நாடு முதலமைச்சர் சென்னையில் இருந்து காணொலிக் காட்சி மூலம் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர் பேரூராட்சியில், வருவாய் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்பை திறந்து வைத்தார்கள், அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார். சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன் உடன் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம் மீன்வளத்துறை இணை இயக்குனர் அலுவலக வளாகத்தில் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயிற்சி மையத்துடன் கூடிய ஒருங்கிணைந்த அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் குத்துவிக்கேற்றி பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன் உள்ளார்.

# பசுமைத்தாயகம் மற்றும் கிரீன் சிட்டி அரிமா சங்கம் சார்பாக மரக்கன்று நடும் விழா

பரனூர் ஜன.30

குடியரசு தின விழா முன்னிட்டு பசுமைத்தாயகம் மற்றும் கிரீன் சிட்டி அரிமா சங்கம் சார்பாக அரசு தொழு நோய் பாதிக்கப்பட்ட மாற்று திறனாளிகளுக்கு புத்தாடை இனிப்பு வழங்கி மரகன்று நடும் விழா நடைபெற்றது.




செங்கல்பட்டு அருகே பரனூர் அரசு மறுவாழ்வு இல்ல வளாகத்தில் மரக்கன்றுகள் நடவு செய்து அரசு மறுவாழ்வு இல்லத்தில் தொழு நோயால் பாதிக்கப்பட்ட 200க்கும் மேற்பட்ட ஆதரவற்ற ஆண் பெண் மாற்று திறனாளிகளுக்கு புத்தாடைகள் மற்றும் இனிப்புகள் வழங்கினர் மேலும் சுற்று பகுதியில் இயற்கை மற்றும் பசுமை பாதுகாத்திட அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள வளாகத்தில் பம்மல் பன்னீர் செல்வம் அவர்களின் தலைமையில் மரக்கன்று நடப்பட்டது இதில் சிறப்பு அழைப்பாளராக பசுமைத்தாயக மாநில துணைச் செயலாளர் அரிமா ஐ.நா.கண்ணன் செங்கல்பட்டு மத்திய மாவட்ட பசுமைத் தாயகம் செயலாளர் திருகச்சூர் செந்தில் நாத் உடனிருந்து புத்தாடை மற்றும் இனிப்புகள் வழங்கினார் இவ்விழாவில் பசுமை தாயகம் நிர்வாகிகள் குரு, ராமகிருஷ்ணன், தாமோதரன், உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பம்மல் ஸ்ரீ நாகவல்லி அம்மன் ஆலயத்தில் 1008 பால்குட ஊர்வல நிகழ்ச்சி



பம்மல் ஜன30

செங்கல்பட்டு மாவட்டம் தாம் பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பம்மல் ஸ்ரீ நாகவல்லி அம்மன் ஆலயத்தில் 42ஆம் ஆண்டு 1008 பால்குட ஊர்வல விழாவில் செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பம்மல் வடக்கு பகுதி அண்ணா திராவிடம் முன்னேற்ற கழகம் ஏற்பாட்டில் பக்தர்களுக்கு மாபெரும் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மாவட்ட செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் ப.தன்சிங், தூங்கி வைத்த னர்.

பகுதி கழகச் செயலாளர் பி.ஜெகநாதன் முன்னிலையில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பம்மல் இரா. லோகநாதன் அவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சி கழக நிர்வாகிகள் துரை. தண்டபாணி, தா.முகுந்தன், பி.ஆர்.எஸ்.சரவணன், ராஜ் மேரி, என்.காசிஅம்மாள், ஏசி ராஜேந்திரன், புண்ணியகோட்டி, எஸ்.குமரன், எஸ்.சுரேஷ், ராஜா ராம், சிட்டிபாபு, வெங்கடேசன் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்.



மதுரை மத்தியசிறையில் உள்ள இல்ல வாசிகளின் நலனுக்காக பிரிசன் மினிஸ்ட்ரி ஆஃப் இந்தியா தொண்டு நிறுவனம் மற்றும் உசிலம்பட்டி சுகாலயா நல வாழ்வு மையம் இணைந்து நடத்திய சிறப்பு பொது மருத்துவ முகாம் நடைபெற்றது.இம்முகாமினை மதுரை மத்திய சிறை கண்காணிப்பாளர் மு.சதீஷ்குமார் துவக்கி வைத்தார். மருத்துவ முகாமில் 260 தண்டனை மற்றும் விசாரணை சிறைவாசிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# வண்டலூரில் எம்ஜிஆர் 108வது பிறந்தநாள்விழா பொதுக்கூட்டம்

வண்டலூர் ஜன 30

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்துக்குட்பட்ட வண்டலூர் பேருந்து நிலைய அருகே முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் 108 வது பிறந்தநாள் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது புரட்சித்தமிழர் எடப்பாடி கே.பழனிச்சாமி ஆணைக்கிணங்க செங்கல்பட்டு மேற்கு மாவட்ட காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எம்.கஜா (எ) கஜேந்திரன் தலைமை ஏற்பாட்டில் 108வது எம்.ஜி.ஆரின் பிறந்த நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது வரவேற்புரை காட்டாங்குளத்தூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் இ.சம்பத்குமார், காட்டாங்குளத்தூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஆர்.குணசேகரன், மறைமலை நகர் கழக செயலாளர் டி.எஸ். ரவிக்குமார், செங்கல்பட்டு நகர கழக செயலாளர் வி.ஆர்.



செந்தில்குமார், மறைமலைநகர் நகரக் கழக செயலாளர் எம்.ஜி.கே.கோபி கண்ணன், டி.ரவி மாவட்ட விவசாய அணி செயலாளர் கண்ணப்பன், மாவட்ட விவசாய அணி அவைத்தலைவர் முன்னிலை நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர் சி.பொன்னையன், தலைமை கழக பேச்சாளர் பசி.சத்தியா, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம்.சின்னையா, செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளர் ப.தன்சிங், பெரும்பாக்கம் இ.ராஜசேகர், ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்

இந்நிகழ்ச்சியில் எஸ்.சேகர், எஸ்.பார்த்திபன், 5வது வார்டு உறுப்பினர் எம்.மாவீரன், குலசேகரன், டி.செல்வாசேகர், கார்த்திகேயன் எஸ்.ஸ்ரீ.சாய் விக்னேஷ், வி.எஸ்.சதீஷ், மண்ணிவாக்கம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சாந்தி புருஷோத்தமன், முன்னாள், மண்ணிவாக்கம் வார்டு உறுப்பினர் நாகராஜன், பொன் தர்மராஜ் அதனைத் தொடர்ந்து 300க்கும் மேற்பட்டோர் மகளிர்களுக்கு புடவை வழங்கினார்கள் கட்சி நிர்வாகிகள் ஊராட்சி செயலாளர்கள் கிளை செயலாளர்கள் மகளிர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். இறுதியில் காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய அண்ணா தொழில் சங்க செயலாளர் எஸ்.செங்குட்டுவன் நன்றி உரையாற்றினார்



கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநாகராட்சி சார்பாக 10 க்கு மேற்பட்ட பேருந்து நிறுத்த பயணிகள் நிழற்குடை கட்டபட்டு வரும் நிலையில் நாகர்கோவில் மாவட்ட நீதிமன்ற பேருந்து நிறுத்தமிடத்தில் கட்டபட்டு வரும் முன்மாதிரி பயணிகள் நிழற்குடை கட்டுமான பணிகளை ரெ.மகேஷ் ஆய்வு மேற்கொண்டார் உடன் மண்டலத் தலைவர் ஜவஹர் மாவட்ட வழக்கறிஞர் சங்கத் தலைவர் ஜெயக்குமார் அரசு தரப்பு வழக்கறிஞர் வீனஸ்ராஜ் மூத்த வழக்கறிஞர் பால ஜனாதிபதி மாமன்ற உறுப்பினர்கள் விஜிலா ஜஸ்டஸ்,நவீன்குமார் உதவி செயற் பொறியாளர் ரகுராம்,இளநிலை பொறியாளர் பாஸ்கர்,பகுதி செயலாளர் ஷேக் மீரான், மாநகர துணை செயலாளர்.வேல்முருகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சரவணன், வட்ட செயலாளர்கள் சுரேஷ் ராமகிருஷ்ணன் மற்றும் தி மு க நிர்வாகிகள் வழக்கறிஞர்கள் உடன் இருந்தனர் .

# டிரோன் மூலம் மருந்து தெளிக்கும் கருவியினை பயன்படுத்தி பயிர் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள தேனி ஆட்சியர் அழைப்பு

தேனி, ஜன.30

கிராமப்புறங்களில் பயிர் சாகுபடியில் பெரும்பாலான பணிகள் பெண்களால் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, பல்வேறு பண்ணை சார்ந்த புதிய தொழில் நுட்பங்களில் முழுமையாக ஈடுபட்டு, அதன் மூலம் மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

வழக்கமாக நாம் பயன்படுத்தும் தெளிப்பான்களோடு ஒப்பீடு செய்தால், டிரோன் மூலம் மருந்தினை தெளிக்கும் போது, மருந்தின் பயன்பாட்டுத்திறன்



அதிகரிக்கிறது. மேலும், டிரோன் மூலம், குறைந்த நேரத்தில் அதிகமான பரப்பில் மருந்து தெளிக்க முடியும். வழக்கமாக மருந்து தெளிப்பதற்குப் பயன்படுத்தும் தண்ணீரின் அளவையும் குறைத்துக் கொள்ளலாம். சாகுபடி செலவும் கணிசமாக குறைகிறது.

எனவே, இத்தகைய டிரோன் தொழில்நுட்பத்தினை சுய உதவிக்குழு மகளிர்களுக்கு கற்றுத்தந்து, அதன் மூலம் அவர்களின் வருமானத்தை உயர்த்துவதற்காக, தமிழ்நாட்டில் 44 சுய உதவிக்குழு பெண்களுக்கு, டிரோன் இயக்குவதற்கான உரிமத்துடன், டிரோன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் டிரோன் மகளிர் தொடர்பான விபரங்கள் உழவர் கைபேசி செயலியில் தனியார் இயந்திர உரிமையாளர்கள் எனும் பக்கத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் டிரோன் மகளிர் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்ளலாம்.

தேனி மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் பெரியகுளம் வட்டம், இலட்சுமிபுரம் கிராமப் பஞ்சாயத்தில் ஈஸ்வரி என்பவருக்கு டிரோன் வழங்கப்பட்டுள்ளது. அவரது தொலைப்பேசி எண். 8838695464.

எனவே, விவசாயிகள் தங்கள் சேவைக்கு உழவர் கைபேசி செயலி மூலமாக டிரோன் மகளிரை நேரடியாகத் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர். வி.ஷஜீவனா, தெரிவித்துள்ளார்.

# சிவகங்கை சிங்கம்புணரி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு திறப்பு விழா

## குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்த கூட்டுறவுத்துறை அமைச்சர்




சிவகங்கை, ஜன.30

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் (29.01.2025) சென்னை தலைமை செயலகத்திலிருந்து, காணொலி காட்சி வாயிலாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், சிங்கம்புணரி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ள, வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு திறப்பு விழாவில், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பங்கேற்று, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி முன்னிலையில் குத்துவிளக்கேற்றி வைத்து சிறப்பித்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் தமிழக அரசின் அனைத்து துறைகளும் சிறந்து விளங்கி வருகிறது. அதில், பொதுமக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை தேவைகளை நிறைவேற்றிடும் பொருட்டு, சம்மந்தப்பட்ட துறைகளுக்கு தேவையான அனைத்து கட்டமைப்புக்கள் மற்றும் நவீன வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது.

அந்தவகையில், இன்றைய தினம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலக கட்டடங்கள் மற்றும் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக்கள் என மொத்தம் 27 கட்டடங்கள் ரூ.16.05 கோடி மதிப்பீட்டில் காணொலி காட்சி வாயிலாக தனது திருக்கரங்களால் திறந்து வைத்து சிறப்பித்துள்ளார்கள்.

அதில், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி, சிங்கம்புணரி வட்டத்திற்குட்பட்ட சிங்கம்புணரி பேரூராட்சி பகுதியில் ரூ.31.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்கான கட்டடத்தினையும் தமிழ்நாடு முதலமைச்சர் காணொலி காட்சி வாயிலாக திறந்துவைத்துள்ளது சிறப்பிற்குரியதாகும்.

மேலும், இவ்வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தின் வாயிலாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சேவைகளை, பொதுமக்கள் எளிதில் பெறுவதற்கு ஏதுவாகவும், அடிப்படையாகவும் இவ்வலுவலகம் அமைந்துள்ளது. இதனை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு, அரசின் திட்டங்களை பெற்று பயனடைய வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சிங்கம்புணரி பேரூராட்சி தலைவர் பி.அம்பலமுத்து, சிங்கம்புணரி வட்டாட்சியர் எஸ்.பரிமளா, சிங்கம்புணரி பேரூராட்சி துணைத் தலைவர் செந்தில் குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ராம அருணகிரி, 14வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் தாயுமானவன், சிங்கம்புணரி பேரூராட்சி செயல் அலுவலர் சண்முகம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திண்டுக்கல்லில் மாநில அளவிலான சிறுதானிய உணவுத் திருவிழா

திண்டுக்கல், ஜன.30

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் மாநில அளவிலான சிறுதானிய உணவுத் திரு விழாவில்,

நுகர்வோர் பாதுகாப்பில் சிறப்பாக பணிபுரிந்த மாவட்டங் களுக்கும்,

நுகர்வோர் அமைப்பு களுக்கும் பாராட்டுச்சான்றிதழ் மற்றும் கேடயங்கள்,

மாநில அளவில் சிறப்பாகப் பணிபுரிந்த நியாயவிலைக்கடை விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களுக்கு ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ்கள், சிறுதானிய விழிப்புணர்வு குறித்து நடைபெற்ற போட்டி களில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு

பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கினர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கர பாணி ஆகியோர் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர் வோர் பாதுகாப்புத்துறை சார்பில் திண்டுக்கல் பி.எஸ்.என்.ஏ. பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான சிறுதானிய உணவுத் திருவிழாவில் கலந்துகொண்டு, நுகர்வோர் பாதுகாப்பில் சிறப்பாக பணி புரிந்த மாவட்டங்களுக்கும், நுகர்வோர் அமைப்புகளுக்கும் பாராட்டுச்சான்றிதழ் மற்றும் கேடயங்கள், மாநில அளவில் சிறப்பாகப் பணிபுரிந்த நியாய விலைக்கடை விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களுக்கு ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்கள், சிறுதானிய விழிப்புணர்வு குறித்து நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றி தழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி சிறப்புரையாற்றினர்.

விழாவிற்கு, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாது காப்புத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், தலைமை வகித்தார். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் முன்னிலை வகித்தார். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, வரவேற் புரையாற்றினார்.

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த.மோகன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, கூட்டுறவுச் சங்கங்களின் பதி வாளர் மரு.ந.சுப்பையன், மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மேலாண்மை இயக்குநர் சு.பழனிசாமி, ஆகியோர் திட்ட விளக்கவுரையாற்றினர்.

ஒன்றிய அரசின் நிதி மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு போதிய நிதி வந்து சேராத நிலையில் கூட, மாநில நிதியிலிருந்து அந்த திட்டங்களை தமிழ் நாடு முதலமைச்சர் நிறை வேற்றி வருகிறார். நிர்வாகத் திறமை மிகுந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பொதுமக்கள் என்றும் உறு துணையுடன் இருக்க வேண்டும், என கூட்டுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இவ்விழாவில், நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ச.உமா, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. கா.ப.கார்த்திகேயன், கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல் வேடசந்துார் சட்டமன்ற உறுப்பினர், ச.காந்தி ராஜன், திண்டுக்கல் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, கூட்டுறவுச் சங்கங்கள் இணைப் பதிவாளர் சி.குருமூர்த்தி, திண்டுக்கல் மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் மற்றும் செயலாட்சியர் இரா. சுபாஷினி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மாவட்ட திட்ட அலுவலர் ச.பூங்கொடி, தமிழ்நாடு நுகர்வோர் பாது காப்பு மையம் மாநில இணைச் செயலாளர் எஸ்.பி.சுப்பிர மணியம், திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர் உரிமை பாதுகாப்புச் சங்கம் மாவட்டத் தலைவர் எஸ்.எஸ்.சுரேஷ்குமார், அரசு அலுவலர்கள், மாணவ, மாண விகள், மகளிர் சுய உதவிக் குழுவினர், உள் ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.




சிவகங்கையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து துறை சாலை பாதுகாப்பு மாத விழா நிகழ்வு இன்று நடைபெற்றது. இதில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும் நெடுஞ்சாலை துறையும்நகர் போக்குவரத்து காவல்துறையும் இணைந்து தனியார்பள்ளியில் மாணவர்களுக்கு விழிப்புணர்வு எடுத்துரைக்கப்பட்டது இதில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் மூக்கன் காவல் போக்குவரத்து ஆய்வாளர் சக்தி இசக்கி நெடுஞ் சாலை உதவிகோட்டப்பொறியாளர் செய்யது இப்ராகிம், உதவி பொறியாளர் ரமேஷ் குமார், நெடுஞ்சாலைத்துறை சாலை ஆய்வாளர் கருப்பையா மற்றும் ஊழியர்கள் பள்ளி தாளாளர் பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்




கன்னியாகுமரி மாவட்ட வட்டார போக்குவரத்து கழகம் சார்பில் நாகர்கோவில் வடசேரி பேருந்து நிலையத்தில் இருந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு வார விழா பேரணி தொடங்கியது.இந்நிகழ்விற்கு மாவட்ட ஆட்சியர். அழகுமீனா கொடியசைத்து தொடங்கி வைத்தார்,மேலும் இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வலியுறுத்தி துண்டு பிரசுரங்களை வழங்கினார். குமரி மாவட்டத்தில் கடந்த ஆண்டின் விபத்தை ஒப்பிடுகையில்,இந்த ஆண்டு விபத்து சதவீதம் குறைந்துள்ளதற்கு ஹெல்மெட் அணிந்து சென்றதே காரணம் என கூறினார்.இதில் போக்குவரத்து போலீசார்,வட்டார போக்குவரத்து அலுவலர்கள், அதிகாரிகள்,வாகன ஓட்டிகள் என பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகத்தில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் தூத்துக்குடி மாவட்டம் திரேஸ்புரத்தில் ரூ.21 கோடி மதீப்பிட்டில் மீன் இறங்கு தளத்தை மேம்படுத்தும் பணிகளை திறந்து வைத்ததைத் தொடர்ந்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் மீன் இறங்கு தளத்தை பார்வையிட்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன் உள்ளார்.

# சிவகங்கை மாவட்டம் தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் ஆட்சிமொழி பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கு நிகழ்ச்சி



சிவகங்கை, ஜன.30

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் நடைபெற்ற ஆட்சிமொழி பயில ரங்கம் மற்றும் கருத்தரங்கம் நிகழ்ச்சியில், இன்று (29.01.2025) மாவட்ட வருவாய் அலுலர் மரு.எஸ்.செல்வசுரபி, அரசு அலுவலகங்களில் ஆட்சிமொழியை முழுமையாக கடைபிடித்து கோப்புகள் பராமரித்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி தெரிவிக்கையில்,

உலக மொழிகளில் தாய் மொழியான தமிழ்மொழி சிறந்து விளங்குகிறது. சங்ககாலங் களில் வாழ்ந்த தமிழர்கள் நாகரிகத்துடனும், தொன்மை யான தமிழ்மொழி தூய்மையான வடிவங்களில் வடிவமைப்பதற்கு வரலாற்று சிறப்பு மிக்க கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்கள் மற்றும் அவர்க ளால் பொறிக்கப்பட்ட தமிழ் மொழிகளும் சான்றாக விளங்கு கிறது. மேலும், தமிழுக்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில், பாரதியார், பாரதிதாசன் உள் ளிட்ட கவிஞர்களும் கவிதை வடிவில் தமிழுக்கு சிறப்பு சேர்த்துள்ளனர்.

தாய்மொழி என்பது அவரவர் மாநிலத்தில் போற்றி பாதுகாக் கக்கூடிய ஒன்றாகும். மற்ற மொழிகள் என்பது அலுவல் ரீதியான பயன்பாட்டிற்கு மட்டுமே இருந்து வரும் நிலையில், தாய்மொழி என்பது நிலையான ஒன்றாக திகழ்ந்து வரக்கூடியதாகும். அத்தகைய மொழியினை போற்றிப் பாது காத்திடும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஆட்சி மொழி கருத்தரங்கம் நடத்தப் பட்டு, அதன் வாயிலாக தாய் மொழியின் மாண்புகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன.

தாய்நாட்டில் முழுமையாக பேச்சு முதல் கோப்புகள் பராம ரிப்பு வரை தமிழ்மொழியை பின்பற்றி பாதுகாப்பதுடன், வருங்காலச் சந்ததியினருக்கு நீங்கள் ஒரு முன்மாதிரியாக திகழ்ந்திட வேண்டும். இதை, மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அரசு அலுவலகங்களில் ஆட்சி மொழியை முழுமையாகப் பின்பற்றி செயல்பட்டு வந்த அலுவலர்கள், பணியாளர் களுக்கு பாராட்டப்பட்டு வரு கிறது.



அதேபோல் இந்தாண்டும் சிறப்பாக செயல்பட்ட அலுவலர் களுக்கு பாராட்டுச் சான்றுகள் வழங்கப்பட உள்ளன. இதே போல் அனைத்துத்துறைகளும் இதனைப் பின்பற்றி சிறப்பாக செயல்பட வேண்டும். தமிழ்மொழி என்பது பல்வேறு இலக்கியங்கள் மற்றும் புராணங்களை பெற்றுத்தந்த மொழியாகும். அத்தகைய தமிழ்மொழியை பாதுகாப்பது ஒவ்வொருவரின் பங்காகும். எனவே, தாய்மொழியை காப்ப தும் அதன் மூலம் அலுவலக செயல்பாடுகளை செயல்படுத்து வதும் என ஒவ்வொன்றையும் முழுமையாக பின்பற்றி அனை வரும் தமிழ்மொழியை பாதுகாத் திட வேண்டும் என மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக் குநர் (மு.கூ.பொ) ச.சீதாலெட் சுமி, தமிழ்த்துறை தலைவர் ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி முனைவர் இரா. கண்ண தாசன், இணைப்பேராசிரியர் தமிழ் உயராய்வு மையம், அழகப்பா அரசு கலைக்கல்லூரி முனைவர் மா.சிதம்பரம், புதுக்கோட்டை மாமல்லன் ஐ.ஏ.எஸ் அகா தெமி நிறுவனர் முனைவர் ப.செந்தில் முருகன், பொன்ன மராவதி முத்தமிழ் பாசறை அறக்கட்டளை செயலாளர் நெ.இரா.சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள், பணியா ளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கம்பம் நகராட்சி பகுதியில் கட்டுமான பணிகளை தேனி எம்பி ஆய்வு

கம்பம், ஜன.30

தேனி மாவட்டம், கம்பம் நக ராட்சி பகுதியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத் தின் கீழ் ரூபாய் 2 கோடியே 65 லட்சம் மதிப்பில் நடை பெற்று வரும் புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளை தங்க தமிழ்ச்செல்வன் எம்பி ஆய்வு செய்தார்

தேனி மாவட்டம், கம்பம் நகராட்சிக்கு உட் பட்ட பகுதிகளில் இது வரை சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல் வேறு நலத்திட்ட பணி கள் நடைபெற்றுள்ளது. இதில், கடந்தாண்டு கம் பம் வாரச்சந்தை கட்டுமான பணிகளை ஆய்வு செய்ய வந்த உள்ளாட்சித் துறை அமைச்சர் கே.என். நேருவிடம், கம்பம் நகரில் பெருகிவரும் போக்குவ ரத்து நெரிசலைக் கட்டுப்ப டுத்த புதிய ஆம்னி பேருந்து நிலையம் அமைக்க நிதி ஒதுக்க வேண்டும் என்று கம்பம் நகர் மன்ற தலைவர் வனிதா நெப்போலியன் கோரிக்கை விடுத்திருந்தார்



இதனையேற்று கடந்த ஜூன் மாதம், கம்பம் வார சந்தையை ஒட்டி யுள்ள பகுதியில் புதிய ஆம்னி பேருந்து நிலை யம் அமைக்க, இரண்டு கோடியே 65 லட்சம் ரூபாய் நிதிஒதுக்கீடு செய்து தமிழக அரசு உத்தரவிட்டது. இதனைத்தொடர்ந்து புதிய பேருந்து நிலைய கட்டு மான பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இப்பணி களை தங்க தமிழ்ச்செல்வன் எம்பி ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது நக ராட்சி பொறியாளர் பா. அய்யனார், உதவி பொறியாளர் ஞா. சந்தோஷ்குமார், திமுக மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் இரா. பாண்டியன், வழக்க றிஞர் துரை நெப்போலியன், முல்லை சேகர், செல்வம், கவுன்சிலர் சொக்கராஜா, உதயன், டாக்டர் வேல் பாண்டியன், ஹானஸ்ட் ராஜ் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.




சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் தேவகோட்டை மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் செந்தில்குமரன் பள்ளி மாணவர்களுக்கு புத்தகங்களை பரிசாக வழங்கி பாராட்டு தெரிவித்தார்.பள்ளி தலைமை ஆசிரியர் லெ .சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார்.

# தேனியில் ஆர்டிஓ-ஆய்வாளர்கள் தலைமையில் தேசிய சாலை பாதுகாப்பு மாத விழிப்புணர்வு முகாம்

தேனி, ஜன.30

தேனி மாவட்ட காவல் கண் காணிப்பாளர் கா. சிவபிரசாத் உத்தரவின்படி, தேனி மாவட்டம் முழுவதும் போலீசார் பல்வேறு விபத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழ்நாடு அரசு போக்கு வரத்து துறை சார்பாக தேசிய சாலை பாதுகாப்பு எனும் ஜனவரி மாதத்தை கொண் டாடும் ஜன 01 முதல் 31 வரை என முன்னெடுத்த அதன் தொடர்ச்சியாக ஜன. 28வது நாளான ஜன.28 அன்று ஆர்.டி.ஓ., மாணிக்கம், ஆய்வா ளர்கள் மணிவண்ணன், அழ கேசன், சுந்தரராமன் ஆகியோர் தலைமையில் உப்பார்பட்டி




டோல்கேட் அருகே தேசிய சாலைபாதுகாப்பு மாதம் விழிப்பு ணர்வு முகாம் வாகன ஓட்டிக ளின் நலன் காக்க வேண்டி நடத்தப்பட்டது.

விழிப்புணர்வு முகாமில் சாலை யில் உள்ள போது முத லில் நீங்கள் சாலை விதிகளை கடைபிடித்து விலைமதிப்பற்ற மனித உயிர்களை காப்பீர், சாலை விதிகளை மதிப்போம் விபத்தினை தவிர்ப்போம் என்பதை முன்னெடுத்து வாகன ஓட்டிகளுக்கு ஹெல்மெட், சீட் பெல்ட் பயன்பாட்டின் முக்கியத் துவம் குறித்து துண்டு பிரசா ரங்கள் வழங்கி விழிப் புணர்வு கொடுக்கப்பட்டது. மேலும், பொதுமக்கள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டி வேண்டுகோள் விடுத்தனர்.

அதன் தொடர்ச்சியாக மாவட் டம் முழுவதும், என்ற மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் சிறப்பு முன்னெ டுப்பு பற்றிய விழிப்புணர்வை பொதுமக்கள், கல்லூரி மாண வர்கள் மாணவியர்கள் மத்தியில் ஏற்படுத்தியும், வாகனங்களின் முகப்பு விளக்குகளில் கருப்பு ஸ்டிக்கர் ஒட்டுதல், சாலை விதிகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் மத்தியில் ஏற்படுத் தியும் விழிப்புணர்வு ஏற்படுத் தினர். சாலை விபத்துக்கள் நடைபெறுவதை தடுக்க மாவட்ட காவல்துறை எடுக்கும் சிறந்த முயற்சிகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க மாவட்ட காவல்துறை சார்பாக கேட்டுக் கொள்கின்றனர்.

மாலை தந்தி



## தேனி தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கம் சார்பில் மாபெரும் பெருந்திரள் முறையீடு ஆர்ப்பாட்டம்



தேனி, ஜன.30

தேனி மாவட்டம் ஆட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர்கள் சங்கம் சார்பில் நியாயம் கேட்ட நியாய விலை கடை பணியாளர்கள் மீது பொய் வழக்கு மற்றும் நிரந்தர பணி நீக்கம் செய்து பழிவாங்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வரும் திருச்சி மாவட்ட கூட்டுறவு துறையை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது

இந்த ஆர்ப்பாட்டத்தில் தேனி திண்டுக்கல் மதுரை மண்டலங்களின் சார்பாக ஆட்சியர் அலுவலகம் முன்பு திருச்சி கூட்டுறவுத் துறை அமராவதி மொத்த கூட்டுறவு பண்டக சாலை நடைபெறும் முறைகேடுகளை மிகிஷி தலைமையில் குழு அமைத்து விசாரணை செய்து செயலாட்சியர் இணைப் பதிவாளர் மற்றும் பொதுமேலாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் அமராவதி மொத்த கூட்டுறவு பண்டக சாலையில் பணிபுரியும் பாத்திமா அவர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்ததையும் அவர் மகன் மீது பொய் கஞ்சா வழக்கை சிபிசிமிஞிக்கு உத்திரவிட வேண்டும் எனவும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு நியாய விலை கடை பணியாளர் சங்கம் சிறப்பு தலைவர் பாலசுப்ரமணியன் மாநில பொருளாளர் பொன் அமைதி கண்ட உரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் ஏராளமான நியாய விலை கடை பணியாளர்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்,

## கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் தலைமையில் சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்

கன்னியாகுமரி, ஜன.30

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வரு வாய் கூட்டரங்கில் மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், நான் முதல்வன் மற்றும் மாவட்ட திறன் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான சிறப்பு வேலை வாய்ப்பு முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, கலந்து கொண்டு மாணவ மாணவியர் களிடையே பேசுகையில்;

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு புத் தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம், நான் முதல்வன் மற்றும் மாவட்ட திறன் மேம் பாட்டு நிறுவனம் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான சிறப்பு வேலை வாய்ப்பு முகாம் இன்று நடைபெற்றது. சென்னையைச் சார்ந்த ராணே ஆட்டோமோட்டிவ் நிறுவனம் இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டனர்.



சிறப்பு வேலைவாயப்பு முகாமில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த கலை மற்றும் அறிவியல், பொறி யியல் மற்றும் தொழில்நுட்ப மாணவ மாணவிகள் மற்றும் பட்டதாரிகள் இந்த முகாமில் கலந்துக் கொண்டனர்.

மேலும் நமது மாவட்டத்தைச் சார்ந்த சுமார் 200 மாணவ மாணவிகள் இந்த முகாமில் கலந்துக் கொண்டனர். நடைபெற்ற முகாமில் மாணவ மாணவியருக்கு தற்காலிக பணி ஆணை வழங்கப்பட்டது. பணிஆணையினைப் பெற்ற அனைத்து மாணவர்களும் இந்த நிறுவனத்தில் சென்று பணிபுரிந்து, நல்ல திறமை களை வளர்த்துக் கொள் ளுங்கள். நீங்கள் அதற்கான பயிற்சிகளை பெற்று, உங்கள் பணியை மேற்கொள்ள கேட்டக் கொள்கிறேன். மேலும் வருங் காலங்களில் நடைபெறும் முகாம்களில் கலந்து கொண்டு நல்ல பணி வாய்ப்புகளைப் பெற்று முன்னேறுங்கள். இந்த பணி ஆணை என்பது முடிவு அல்ல. துவக்கமே. இதனை ஆதாரமாக எடுத்து வளமான எதிர்காலத்தினை உருவாக்க உங்களை கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர். அழகுமீனா, பேசினார்கள்.

நடைபெற்ற முகாமில் மாவட்ட திறன் மேம்பாட்டு அலுவலக இயக்குநர் லட்சுமிகாந்தன், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்க திருநெல்வேலி மண்டல திட்ட மேலாளர் ராகுல் மற்றும் ராணே ஆட்டோமோட்டிவ் நிறுவனம் நிறுவனங்களைச் சார்ந்த மனித வள அலுவலர்கள், மாணவ மாணவியர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

## ஒட்டன்சத்திரத்தில் ரூ.66.23 கோடி மதிப்பீட்டில் 480 அடுக்குமாடி குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டிய உணவுத்துறை அமைச்சர்

ஒட்டன்சத்திரம், ஜன.30

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் கீரனூர் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகளை சென்னையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்



அதனைத்தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் .ஆர்.சச்சிதானந்தம் முன்னிலையில் ஒட்டன்சத்திரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்.

இந்நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் பேசியதாவது:

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் 480 ஜி பிளஸ் 3 அடுக்குமாடி குடியிருப்புகள் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் ரூ.66.23 கோடி மதிப்பீட்டிலும், கீரனூர் பேரூராட்சி அண்ணாநகரில் 432 குடியிருப்புகள் ரூ.57.04 கோடி மதிப்பீட்டிலும் என இரு திட்டங்களும், உள் கட்டமைப்பு வசதிகளுடன் அனுமதி வழங்கி, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணிகள் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, வீட்டின் உரிமையாளர்களுக்கு குடியிருப்பு சாவிகள் ஒப்படைக்கப்படும்.

மேலும், பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மை பிரிவினர் மக்களுக்கும் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்ற பின்பு ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் கீரனூர் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பெ.திலகவதி, ஒட்டன்சத்திரம் நகராட்சித் தலைவர் .க.திருமலைச்சாமி, துணைத்தலைவர் .ப.வெள்ளைச்சாமி, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியம் உதவி நிர்வாகப் பொறியாளர் ஈஸ்வரி, ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் சுவேதா,சுப்பிரமணிய பிரபு, சுகாதார ஆய்வாளர் ராஜ் மோகன் வருவாய்ஆய்வாளர் விஜய் ராகவன் , துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சக்திவேல், ஈஸ்வரி, ஒட்டன் சத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமராஜ், வடிவேல் முருகன் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## திருக்குறள் 1330 ஐ ஒப்புவித்து அசத்திய அரசுப்பள்ளி மாணவன் பரிசு வழங்கி ஊக்கப்படுத்திய பி.டி.செல்வகுமார்

நாகர்கோயில் ஜன 29

குமரி மாவட்டம் தெற்குசூரங்குடி வைகுண்டர் நற்பணி மன்றத்தின் 25 ஆம் ஆண்டு பவள விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினராக கலப்பை மக்கள் இயக்க நிறுவனத் தலைவரும் பிரபல சினிமா இயக்குனருமான பி.டி.செல்வகுமார் கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடங்கிவைத்தார். அப்போது மேடையில் பழவிளை கிடங்கன்கரை விளை அரசு நடுநிலைப்பள்ளி ஆறாம் வகுப்பு மாணவன் ராமபிரதாப் ஒரு மணி நேரத்தில் 1330 திருக்குறளையும் ஒப்புவித்தார்.



மாணவரின் திறமையை பாராட்டி பி.டி. செல்வகுமார் ஊக்கத் தொகையும், கேடயமும் வழங்கி பாராட்டினார்.மேடையில் பரிசு வழங்கி பி.டி. செல்வக்குமார் பேசியதாவது: ஏழை மாணவர்களுக்கு கல்வி ஒரு தடையாக இருக்கக் கூடாது, இந்தசிறுவயதுமாணவனுடைய திறமையை உலகறிய செய்ய வேண்டும். அவனுடைய திறன் மேம்பட வேண்டும் என்பதற்காக இந்த பரிசு தொகையை வழங்கினேன். அதேபோல இங்கு ஜாதி மதத்திற்கு அப்பாற்பட்டு ஒரு பொதுநலத்தோடு இப்படி ஒரு பிரமாண்டமான விழாவை ஏற்பாடு செய்து பரிசுகள் வழங்கி திறமையாளர்களை அங்கீகாரம் செய்கிறார்கள். நிச்சயமாக இதை பாராட்ட நான்கடமைப்பட்டிருக்கிறேன். மாணவ சமுதாயத்திற்கு ஒரே ஒரு வேண்டுகோள் அதாவது இரவு 7:00 மணிக்கு மேல் நீங்கள் யாரிடமும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளாதீர்கள். குறிப்பாக பெண்கள் பல்வேறு ஆபத்துகளும், திருமணத்திற்கு பிறகு பல சிக்கல்களும் இதனால் ஏற்படுகிறது.

அதேபோல மாணவ செல்வங்களே நடிகர்கள் பின்னால் சென்று உங்கள் வாழ்க்கையை பாழாக்கி கொள்ளாதீர்கள். உங்கள் வாழ்க்கை உங்கள் கையில் தான் உள்ளது. உடல் ஆரோக்கியம் ரொம்ப முக்கியம். அதிகாலை எழுந்து உடற்பயிற்சியும் நடை பயணமும் செய்தால் மனநலமும் உடல் நலமும் வளர்ச்சி அடையும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் கலப்பை மக்கள் இயக்கம் மாவட்ட தலைவர் வக்கீல் பாலகிருஷ்ணன், தலைமை ஆசிரியர் லிங்கேசன், நற்பணி மன்ற தலைவர் ராதாகிருஷ்ணன், விழா தலைவரும் மன்ற அமைப்பாளருமான செல்ல கண்ணன், துணை அமைப்பாளர் கண்ணன், வக்கீல் சரவணன், முன்னாள் ஊராட்சிதலைவர் கணேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பழனியில் போக்குவரத்து காவல்துறை சார்பில் விழிப்புணர்வு பேரணி

பழனி: ஜன 30

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் சாலை போக்குவரத்து விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.



போக்குவரத்து காவல்துறை மற்றும் பழனி வட்டார போக்குவரத்து அலுவலகம் சார்பில் பழனி பேருந்து நிலையம் அருகே சாலை போக்குவரத்தா விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வாகனங்களில் செல்லும் போது செல்போன் பேசிக்கொண்டு செல்வது, முறையான ஆவணங்கள் இன்றி வாகனங்கள் ஓட்டுவது, சாலை விதிமுறைகளை பின்பற்றாமல் வாகனம் ஓட்டுவது ஆகியவற்றால் ஏற்படும் கேடு குறித்து மாணவ மாணவிகள் பங்கேற்ற நாடகம் நடைபெற்றது.

தொடர்ந்து பேரணியை வட்டார போக்குவரத்து அலுவலர் கார்த்திகேயன் கொடி அசைத்து துவக்கி வைத்தார். பேருந்து நிலையத்திலிருந்து துவங்கிய பேரணையானது பழனி நகர முக்கிய வீதிகளில் வலம் வந்து மீண்டும் பேருந்து நிலையத்திலேயே நிறைவடைந்தது. கேரணியில் விழிப்புணர்வு பதாகைகள் ஏந்தியபடி போக்குவரத்துக் காவல் துறையினர், வட்டாரப் போக்குவரத்து அலுவலக அலுவலர்கள், கல்லூரி மாணவ மாணவிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## வாடிப்பட்டி அருகே நகரி பகுதியில் 3 மாதமாக குடிதண்ணீர் வராததை கண்டித்து பெண்கள் சாலை மறியல்



வாடிப்பட்டி ஜன 30

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் அயங்கோட்டை ஊராட்சிக்கு உட்பட்ட நகரியில் கடந்த மூன்று மாதமாக குடி தண்ணீர் வரவில்லை இது குறித்து முன்னாள் ஊராட்சி மன்றதலைவர் ஊராட்சிசெயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஆகிய அனைவரிடமும் புகார் அளித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனக்கூறி நேற்று காலை 9 மணி அளவில் மதுரை திண்டுக்கல் தேசிய நான்கு வழி சாலையில் பெண்கள் காலி குடங்களுடன் சாலை மறியலில் ஈடுபட்டு வருகின்றனர் காலை நேரம் என்பதால் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் இரண்டு கிலோமீட்டர் தூரம் வரிசையில் நிற்கிறது. இதனால் பள்ளி மாணவ மாணவிகள் தனியார் பணியாளர்கள் கடும் பாதிப்புக்குள்ளாயினர் சிலர் சோழவந்தான் வழியாக மாற்றுப்பாதையில் செல்ல தயாராயினர் ஆனால் அவர்களையும் மறித்து செல்ல விடாமல் தடுத்தனர் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போக்குவரத்து காவல் அதிகாரியுடன் பொதுமக்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது குடிதண்ணீர் உடனே வரவேண்டும் என்று கூறி கடும் வாக்குவாதத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர்.

மதுரை திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலை என்பதால் 3 கிலோமீட்டர் தூரம் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

## சோழவந்தான் திருவேடகம் வைகை ஆற்றில் தை அமாவாசையை முன்னிட்டு முன்னோர்களுக்கு தர்ப்பணம்

சோழவந்தான், ஜன.30

திருவேடகம், சோழவந்தான், ஆகிய வைகை ஆறு கரை பகுதிகளில் தை அமாவாசை முன்னிட்டு உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து தங்களது முன்னோர்களுக்காக தர்ப்பணம் கொடுக்க பொது மக்கள் தங்களது குடும்பத்துடன் குவிந்தனர்.



சோழவந்தான் அருகே திருவேடகம் படித்துறை பகுதியில் இன்று அதிகாலை 3 மணியிலிருந்து திருவேடகம் மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்கள் மதுரை மற்றும் அருகில் உள்ள மாவட்டங்களில் இருந்தும் பொதுமக்கள் தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க குவிந்தனர். தைஅமாவாசை முன்னிட்டு தர்ப்பணம் கொடுக்க வந்தவர்களுக்கு கோபால கிருஷ்ணன் தலைமையில் பாலகிருஷ்ணன்அய்யர் உள்பட 20க்கு மேற்பட்ட வேத பண்டிதர்கள் மந்திரங்கள் ஓதினர். திருவேடகம் சீரடிசாய்பாபா கோவில்முன்பாக வைகை ஆற்று கரையில் தங்களது முன்னோர்களுக்காக பொது மக்கள் தர்ப்பணம் கொடுத்தனர்.

சோழவந்தான் சப்இன்ஸ்பெக்டர் முருகேசன், சிறப்பு சப் இன்ஸ்பெக்டர்கள் காமாட்சி, முத்து மற்றும் போலீசார் பாதுகாப்பு ஏற்பாடு செய்திருந்தனர். இதே போல் சோழவந்தான் வைகை ஆறு படித்துறை விநாயகர் கோவிலில் கார்த்தி ஐயர் தர்ப்பணம் கொடுக்க வந்தவர்களுக்கு மந்திரம் ஓதினார். தங்களது முன்னோர்களுக்காக தர்ப்பணம் கொடுத்தனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161